பக்கங்கள் 18+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 30 ஞாயிற்றுக்கிழமை 15.12.2024 | அதிர்வு 136

## சபாநாயகர் பதவிக்கு சஜித் அணியும் போட்டி



ஐக்கிய மக்கள் சக்தியும் சபாநாயகர்பதவிக்கு நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவரை நிறுத்தும் என்று அக்கட்சி யின் நாடாளுமன்ற

02 ▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# இந்தியா பறந்தார் அநுர



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவி யேற்றுக் கொண்டதன் பின்னர் மேற்கொள்ளும் முதல் சுற்றுப் பயணமாக இன்று பிற்பகல் நாட்டிலி ருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்முவின் அழைப்பின் பேரில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவி ருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 17 ஆம் திகதி வரையில் இந்தியாவில் தங்கியிருப் பார்.

02 ▶



# தீர்வு விடயத்தில் தேர்தல் வெற்றியை பார்க்கவே முடியாது!

## சுமந்திரனின் கருத்துக்குச் செல்வம் பதில்



(கி.வசந்தன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சி கூடுதலான ஆசனங்களைப் பெற்றுவிட்டது என்பதற்காக அவர்கள் எடுக்கின்ற முடிவுக்கு ஏனையவர்கள் ஒத்துவரவேண்டும் என்று சொல்வது முறையற்ற செயல். தேர்தல் வெற்றிகளை வைத்து இனப்பிரச்சினைக் கான அரசியல் தீர்வு விடயத்தைப் பார்க்க முடியாது. இது சுமந்திரனுக்கும் தெரியும்."

- இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டனியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக் கலநாதன் தெரிவித்தார்.

02 ▶

# வவுனியாவில் அரச ஊழியரின் சடலம் மீட்பு!

(கி.வசந்தன்)

வவுனியா, சேமமடு குளத்தின் வான் பகுதியில் இருந்து அரச ஊழியரான இளைஞர் ஒருவரின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி இளைஞர் வன ஜீவராசிகள் திணைக்களத்தால் அமைக்கப்பட்டுள்ள யானை வேலிகளைப் பராமரிக்கும் பணி செய்து வருகின்றார்.

அவர் நேற்று மாலை சேமமடு குளத் தின் ஆற்றுப் பகுதிக்குச் சென்றுள்ளார். நீண்ட நேரமாகிய நிலையில் அவரை-ரக் காணாத நண்பர்கள் தேடியுள்ளனர்.

இந்நிலையில், அவரது சடலம் இன்று காலை குறித்த ஆற்றுப் பகுதியில் இருந்து இளைஞர்களால் மீட்கப்பட்டது.

மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த நிரஞ்சன் என்ற அரச ஊழியரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





## UCMAS சர்வதேசப் போட்டியில்

# அதிக சம்பியன்களை வென்று சாதனை படைத்த யாழ். கிளை

(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவின் புதுடில்லியில் நடை பெற்ற சர்வதேச UCMAS போட்டியில் இலங்கையில் இருந்து சென்ற மாண வர்களில் அதிகூடிய சம்பியன்களைப் பெற்று யாழ்ப்பாணம் நகரத்துக்கான கிளை சாதனை படைத்துள்ளது.

இந்தப் போட்டியில் பல்வேறுபட்ட உலக நாடுகளில் இருந்து ஆயிரத்துக் கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டதுடன் இலங்கையில் பல பாகங்களில் இருந்தும் 103 மாணவர்கள் பங்கேற்றனர்.

இவர்களில் பல்வேறுபட்ட பிரிவு களைச் சேர்ந்த 16 மாணவர்கள் சர்வ தேச சம்பியன் பட்டத்தை வென்றுள்ள நிலையில், யாழ்ப்பாணம் கிளையில் இருந்து 6 பேர் கலந்துகொண்டு அர்த் தனா பிரசாந், டெரிக் ஜோய் ஜெயந்தன், அஸ்விதா விக்னேஸ்வரன், சேர்ஜியஸ் இருதியராஜா ஆகிய நால்வரும் சாம்பி யன்களாகவும், ரண்ணறப்பாக பவிரா கோபிலன், மானுசா கோபிலன் ஆகிய இருவரும் வென்றுள்ளமை குறிப்பி டத்தக்கது.

BRAINWAVE ACADEMY யின் மூலம் UCMAS, Robotics, English Speaking பாட நெறிகளை நடத்தி வருகின்ற ஆசிரி யர் தயானா சந்துருவின் வழிகாட்டலில் ஆரம்பித்த மிகக் குறுகிய காலத்தில் National, International ரீதியாக இந்த நிறுவனம் சாதனை படைத்து வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### தீர்வு விடயத்தில்...

வவுனியாவில் இன்று ஊடகங்களுக் குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழர்களைப் பொறுத்த வரை பல பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின் றன. எனவே, இனப் பிரச்சினை சார்ந்த விடயத்தில் ஒரு கட்சி எடுக்கும் முடிவுக்கு ஆதரவாக மற்றக் கட்சிகள் செல்வ தென்பது சாத்தியமில்லை.

ஒன்றாக இணைந்து ஒரு மேசையில் இருந்து விவாதித்து ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கும்போதே அது வலுவான தாகவும், பலமானதாகவும் இருக்கும். அதன் மூலமே புதிய அரசியல் சாசனத் தில் எவ்வாறான கோரிக்கையை முன்வைக்கலாம் என்ற கடப்பாட்டை நாம் செய்ய முடியும்.

தமிழரசுக் கட்சி கூடுதலான ஆசனங் களைப் பெற்றுவிட்டது என்பதற்காக அவர்கள் எடுக்கின்ற முடிவுக்கு ஏனை யவர்கள் ஒத்துவர வேண்டும் என்று சொல்வது முறையற்ற செயல். தேர் தல் வெற்றிகளை வைத்து இதனைப் பார்க்க முடியாது.

ஒற்றுமையான தீர்வு திட்டத்தை முன்வைக்கின்றபோதே எமது மக்களும் அதை விரும்புவார்கள். அந்தப் பலத் தின் மூலமே அரசின் பார்வையை எமது பக்கம் திருப்ப முடியும். தனித்தனியாகச் செயற்பட்டால் அதை வைத்து அரசியல் செய்யும் நிலையில் புதிய அரசு ஈடுபடும்.

பிரிந்து சென்றதால் நாம் பல பாடங் களைக் கற்றிருக்கின்றோம். எனவே, நாங்கள் செய்வோம், நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்வது சாத்தியமற்ற ஒன்றாகவே நான் பார்க்கின் றேன். சுமந்திரனுக்கும் இது நன்றாகத் தெரியும். அவரும் ஒத்து வருவார் என்று நினைக்கின்றேன். தமிழரசுக் கட்சியும் ஒத்துவரும் என்று நினைக்கின்றேன்.” – என்றார்.

‘அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் கடந்த காலங்களில் தமிழரசுக் கட்சி தீர்க்க மான நிலைப்பாட்டில் இருந்துள்ளது. சில வரைபுகளும் செய்யப்பட்டுள்ளன. எனவே, மற்றவர்கள் எமது நிலைப்பாட் டோடு இணைந்து செயற்பட முன்வந் தால், அதில் எந்த ஆட்சேபனையும் இருக்கப்போவதில்லை. நாம் தமிழர் களின் பிரதான கட்சி. இந்தத் தேர்த லில் வடக்கு, கிழக்கில் சகல மாவட்டங் களில் இருந்தும் ஆசனங்களைப் பெற்ற ஒரேயொரு கட்சி. ஆகவே, எமது திட்டத் துக்கு ஏனைய தேசிய கட்சிகள் வர வேண்டும்.” – என்று தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று வவுனியாவில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது.

### இந்தியா பறந்தார்...

இந்தச் சுற்றுப் பயணத்தின்போது இந்தி யப் பிரதமர் நரேந்திர மோடியுடனான இரு தரப்பு சந்திப்பில் முக்கிய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இந்தியாவின் துணை ஜனாதிபதி ஸ்ரீஜக்தீப் தன்கர், இந்திய வெளிவிவ கார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெயசங் கர், இந்திய சுகாதார அமைச்சர் ஜே.பி. நந்தா, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ அஜித் தோவல் உள்ளிட்ட இராஜதந்திரிகள் பலருடனும் கலந்துரை யாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் முதலீடு மற்றும் வணிகம் தொடர்புகளைப் பலப்படுத்தும் நோக்கில் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் வர்த்தகர்களுட னான சந்திப்பிலும் ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளார்.

அடுத்தபடியாக ஜனாதிபதி புத்தகா யாவுக்கான சுற்றுப் பயணம் ஒன்றையும் அவர் மேற்கொள்ளவுள்ளார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளி நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபி விருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ உள்ளிட் டோரும் இந்தச் சுற்றுப் பயணத்தில் கலந்துகொள்வர்.

### சபாநாயகர்...

உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

சபாநாயகர் பதவிக்கு முன்மொழி யப்படவுள்ள வேட்பாளரின் பெயர் தொடர் பில் நாளை திங்கட்கிழமை தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

எனவே, எதிர்வரும் 17 ஆம் திகதி நாடா ளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலமே சபாநாயகர் தேர்வு இடம்பெறவுள் ளது.

# வவுனியா அல் இக்பால் மகா வித்தியாலயத்தில் சாதனையாளர் கௌரவிப்பு



(கி.வசந்தன்)

வவுனியா அல் இக்பால் மகா வித்தியாலயத்தில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

வித்தியாலயத்தின் அதிபர் எம்.எம். அன்பஸ் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

முன்னதாக அதிதிகள் பிரதான வீதியில் இருந்து பான்ட் அணிவகுப்புடன் மாலை அணிவித்து வரவழைக்கப்பட்டதுடன் பிரதான மண்டபத்தில் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, கடந்த 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறித்த பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிய மாணவர்கள், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் மாகாணம், மாவட்டம், வலயம் ஆகிய மட்டங்களில் சாதனைகளை நிலைநிறுத்திய மாணவர்கள் என 77 பேர் கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன், தெரிவு செய்யப்பட்ட மாணவத் தலைவர்களுக்கு அதிதிகளால் சின்னம் அணிவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கலை நிகழ்வுகளும் இதன்போது இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகளில் வவுனியா மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத் சந்திர, வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்னமலர் சுரேந்திரன், வவுனியா தெற்கு வலய ஆசிரிய ஆலோசகர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், பள்ளித் தலைவர்க ள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், அப்பகுதி அபிவிருத்தி உத்தியோகத்தர், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.













## மேம்பட்ட பல்வேறு வசதிகளுடன்

# காங்கேசன்துறை - நாகை படகு சேவை ஜனவரி மாதத்தில் மீண்டும் ஆரம்பம்!

## சுபம் குழுமத்தின் தலைவர் சுந்தர்ராஜ் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

காங்கேசன்துறைக்கும் நாகைப் பட்டினத்துக்கும் இடையிலான படகு சேவை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மீண்டும் வாரத்துக்கு ஆறு நாட்கள் மேம்பட்ட வசதிகளுடன் ஆரம்பமாக வுள்ளது என்று சுபம் குழுமத்தின் தலைவரும் காங்கேசன்துறை, நாகைப்பட்டினம் படகு சேவை முதலீட்டாளருமான பொன்னுசாமி சுந்தர்ராஜ் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறுகூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

”இந்தியாவில் சுபம் குறூப் ஒப் கம்பனிஸ் பல்வேறு வியாபார நிறுவனங்களை உள்ளடக்கியதொன்றாகும். குறிப்பாக, தனிமனிதனின் தலைமைத்துவத்தில் 500 இற்கும் மேற்பட்ட பாரவூர்தி போக்குவரத்து சேவையை வழங்குவதாக இருக்கின்றது.

அத்துடன் எமது பிறிதொரு நிறுவமான சுபம் நிறுவனம் காங்கேசன்துறை, நாகைப்பட்டினத்துக்கு இடையிலான படகு சேவையில் முதலீடுகளைச் செய்துள்ளது. இதனையடுத்து கடந்த ஆகஸ்ட் மாதம் இந்த படகு சேவை ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும் காலநிலை முன்னெச்சரிக்கையின் காரணமாக தற்காலிகமாக சேவை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

இம்மாதம் 23ஆம் திகதி வங்களா விரிகுடாவில் காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாக்குவதற்கான நிலைமைகளும் உள்ளன. இதனால் 19ஆம் திகதி மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடாகியிருந்த படகு சேவையை சிறிய காலத்துக்கு ஒத்திவைத்துள்ளோம்.

இந்நிலையில், எதிர்வரும் ஜனவரியில் மீண்டும் காங்கேசன்துறைக்கும் நாகைப்பட்டினத்துக்கும் இடையிலான படகு சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதோடு இதனைச் சுபம் நிறுவனமே நேரடியாக கையாளப்போகின்றது.

நாங்கள் படகு சேவையை கடந்த மூன்று மாத காலத்தில் முன்னெடுத்த போது சிறுசிறு சறுக்கல்களும் காணப்பட்டுள்ளன. எனினும், அனைத்து தரப்பினரினதும் ஒத்துழைப்புக்களுடன் சிறப்பாக எமது சேவையை கடந்த காலத்தில் முன்னெடுக்க முடிந்திருந்தது.

மீள படகு சேவை ஆரம்பிக்கப்படும் போது, சில மேம்பட்ட வசதிகளை முன்னெடுத்துள்ளோம். முக்கியமாக சுற்றுலாப் பயணிகளை அதிகரிக்கும் நோக்கத்தில் பயணக் கட்டணங்களை மாற்றியமைத்துள்ளோம்.




தற்போது இருவழிக் கட்டணமாக 9 ஆயிரத்து 700 இந்திய ரூபா அறவிடப்படுகின்றது. அதனை நாம் 8 ஆயிரத்து 500 இந்திய ரூபாவாக மாற்றியமைப்பதோடு பத்து கிலோகிராம் எடையுடைய பொதியையும் இலவசமாகக் கொண்டுவர முடியும்.

மேலதிகமாக அதிக எடையுடைய பொதிகளை கொண்டுசெல்வதாக இருந்தால் அதற்கான மேலதிக கட்டணங்களைச் செலுத்த வேண்டியுள்ளது. அதற்கான தொகைகள் எமது உத்தியோகபூர்வமான இணைதளத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. பயணப்பொதிகளுக்கான முற்பதிவுகளை இணையத்தின் ஊடாக மட்டுமே மேற்கொள்ள முடியும்.

அதேநேரம், நாகைப்பட்டினத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் பயணிகள் அதிகாலையிலேயே வருகை தருவதாலும், அதேபோன்று காங்கேசன்துறையில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் பயணிகள் முற்பகலில் பயணத்தை ஆரம்பிப்பதாலும் அவர்களுக்கான உணவுத் தேவையை பூர்த்தி செய்வதில் நெருக்கடிகள் இருந்தன.

இதனால் நாம் காலையில் இட்லி, பொங்கல், போன்ற உணவுகளையும் நண்பகலில் மரக்கறி புரியாணி போன்ற மாறுபட்ட உணவுகளையும் பயணக்கட்டணத்துக்கு உட்பட்டதாகவே வழங்கவுள்ளோம்.

அதேபோன்று, நேரடியாக வருவிக்கப்பட்ட பசும்பாலை பயன்படுத்தி தேநீர் மற்றும் கோப்பி ஆகியவற்றையும் குளிர்பாணங்களையும் இலவசமாக வழங்கவுள்ளோம். மேலும், வரிச்சலுகையுடன் பொருட்கள் விற்பனை நிலையமொன்றையும் நாம் படகில் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் இறுதிக்கட்டத்தினை அடைந்துள்ளது.

சுபம் நிறுவனம் நேரடியாகவே படகு சேவையைக் கையாளுவதன் காரணமாக பயணச்சீட்டுக்கள் மற்றும் குறுகிய பயணத்திட்டங்களை மையப்படுத்திய புதிய இணையதளம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இணையத்தளமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த இணையத்தளத்தில் குறுகிய பயணத்திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. உதாரணமாக, இரண்டு இரவு மூன்று பகல் தங்குமிட மற்றும் உள்ளக போக்குவரத்து வசதிகளுடன் காணப்படுகின்றது. இதற்கான தொகை இந்திய ரூபாவில் 15ஆயிரமாக காணப்படுவதோடு இலங்கை ரூபாவில் 50 ஆயிரம் வரையில் இருக்கின்றது. இவ்விதமான திட்டங்கள் நடுத்தர பயணிகளை மையப்படுத்தியதாகவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணம் இயற்கை வளங்கள் நிறைந்ததாக காணப்படுகின்றது. பிரசித்திபெற்ற சமயத்தலங்கள், வரலாற்று இடங்கள், கலாசார முக்கியத்துவ பகுதிகள் உள்ளிட்ட பலதரப்பட்ட சிறப்புக்களை கொண்டிருக்கின்றன. சுற்றுலாப் பயணிகளை இந்தப்பகுதிகள் மிகவும் கவர்ந்தவையாக இருக்கின்றன என்பதை எம்மால் உறுதியாகக்கூற முடிகின்றது. ஆகவே, குறைந்த செலவில் சுற்றுலாப்பயணிகள் பயணங்கள் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களை நாங்கள் ஏற்பாடு செய்துள்ளதோடு தொடர்ச்சியான படகு சேவையை முன்னெடுப்பதற்கும் தீர்மானித்துள்ளோம்.”

– என்றார்.



# ஹிஸ்புல்லா எம்.பிக்குக் கௌரவம்

(மட்டு. துஷாரா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற நாடாளு மன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ் புல்லாஹ்வை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (14) காத்தான்குடி பள்ளிவாயல் கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

சம்மேளனத்தின் தலைவர் ஏ.எம். எம்.தௌபீக் தலை மையில் இடம்பெற்ற இவ்விழான்போது, ஹிஸ்புல்லாஹ்வின் அரசியல் அர்ப்பணிப்புகள் மற்றும் எதிர்கால முஸ்லிம் நாடாளுமன்ற பிரதி நிதித்துவம் எவ்வாறு செயற்பட வேண் டும் என்பது தொடர்பான விடயங்கள் பற்றி உரையாற்றப்பட்டது.



அதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட ஹிஸ்புல்லா பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌர விக்கப்பட்டார்.

இவ்விழாவில் காத்தான்குடி பள்ளி வாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பிரமுகர்கள், உலமாக்கள், சமூக செயற் பாட்டாளர்கள் என பலரும் பங்கேற்ற னர்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சரியான கோரிக்கை

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்க இன்று புதுடில்லிக்கு மூன்று நாள் விஜயமாகப் பயணமாகும் சூழ்நிலையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முக்கிய கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கூடியவாறான சமஷ்டி அரசமைப்பு ஒன்றைத் தமிழ் மக்கள் வலியுறுத்திக் கோருவதற்கான ஆதரவை இந்தியா இச்சமயத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்று இந்தியப் பிரதமரை அவர் கேட்டிருக்கிறார்.

கடந்த 75 வருட காலமாக பின்பற்றப்பட்டு வந்த கொள்கைகள் மற்றும் தீர்வு காணப்படாத இனப்பிரச்சினை என்பன பொருளாதார ரீதியில் மாத்திரமன்றி அரசியல் ரீதியிலும் வங்குறோத்து நிலை மட்டத்துக்கு இலங்கையைக் கொண்டு வந்து நிறுத்தி இருக்கின்றது என்று அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

ஒற்றையாட்சிக்கு வெளியில் வந்து சமஷ்டி முறையிலான தீர்வுக்கு தமிழர்கள் வலியுறுத்துவதற்கான அடிப்படைக் காரணம் அந்தக் கடிதத்தில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகளான தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் இணக்கமான தீர்வு ஒன்றை ஏற்படுத்துதல் என்ற பெயரில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டது.

தமிழர்களின் நலனை கவனத்தில் கொண்டு புதுடில்லி, கொழும்பு அரசோடு இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதாக அப்போது அறிவிக்கப்பட்டது.

சரியோ, பிழையோ இன்றுவரை இந்த ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை நடைமுறைப்படுத்தும்படி இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வந்தாலும் இந்த விடயத்தில் இன்னொரு தரப்பும் மூலம் ஒப்பந்த ஏற்பாடுகளை மலினப்படுத்தி பாதிக்கச் செய்து வருவதை நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாகச் சுட்டி காட்டி இருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்.

இலங்கை - இந்தியா ஒப்பந்தம் நேரடியாக இலங்கையையும் இந்தியாவையும் சம்பந்தப்படுத்தி கட்டுப்படுத்துவதாக இருந்தாலும் அதற்கு அப்பால் இன்னொரு தரப்பை வைத்து இந்த விடயங்களை நீர்த்துப் போகச் செய்ய இலங்கை காரியமாற்றி வருவது இந்தக் கடிதத்தின் வாசகங்கள் ஊடாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அது, கடந்த 75 ஆண்டுகளாக இலங்கை தமிழ் மக்கள் தமது நம்பிக்கையை பெரிதும் இழந்து வந்த இலங்கையின் நீதித்துறையாகும். யுத்தத்தின் இறுதி கட்டத்தில் இடம் பெற்றவை என்று கூறப்படும் யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்ற விடயத்தில் சர்வதேச நீதி விசாரணையைத் தமிழர்கள் வலியுறுத்தி நிற்பதும் இந்த நீதித்துறை மீதான அவநம்பிக்கை காரணமாகவே.

இலங்கை - இந்திய ஒப்பந்த ஷரத்துகளை இந்த நீதித்துறை மூலமே இலங்கை சிதறடித்து வருகின்றது என்பதை கடந்த காலத்தில் இந்த விடயத்தை ஒட்டி வழங்கப்பட்ட முப்பதுக்கும் அதிகமான இலங்கை நீதிமன்ற தீர்ப்புகளை கோடி காட்டி தெளிவுபடுத்த முயல்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

ஒற்றை ஆட்சியின் கீழ் எந்தத் தீர்வு அமைந்தாலும், இலங்கையின் எல்லா நிர்வாக அதிகாரங்களும் கொழும்பில் மட்டுமே இருக்கும் என்ற நிலைப்பாட்டை நீதிமன்றங்கள் அனைத்தும் எடுப்பதால், பரவலாக்கப்பட்ட அதிகாரங்கள் எல்லாம் கேள்விக்குறியாகி அர்த்தமற்றவையாகப் போய் விடுகின்றன என்ற உண்மையை இந்த கடிதத்தில் கோடி காட்டி இருக்கிறார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

வழங்கப்பட்ட அதிகாரங்களை அரசியல் ரீதியாகப் பிடுங்குவதாகக் காட்டாமல், நீதிமன்றங்கள் மூலம் அதனைச் செய்து கொண்டு, கொழும்பு அரசை அந்த அதிகாரப் பிடுங்கலுக்குக் காரணமாக்காமல் காபந்து பண்ணும் ஒரு தந்திரோபாயமும் கூட இலங்கை ஆட்சிப் பீடத்தினால் முன்னெடுக்கப்படுவதும் கவனிக்கப்பட வேண்டும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாக ரீதியான இணைப்பு இதே வகையில்தான் சிதறடிக்கப்பட்டது. அது, இப்போது ஆட்சிப்பீடமேறியிருக்கும் தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பி. மூலமே முன்னெடுக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்படி வழங்கப்பட்ட அதிகாரப் பரவலாக்களில் நீதித்துறை தலையிட்டு அதனை நீர்த்துப் போகச் செய்யும் ஏற்பாடுகளுக்கு ஒற்றையாட்சி முறையே இடமளிக்கின்றது என்ற காரணத்தால், அதற்கு வெளியில் வந்து தீர்வு காண வலியுறுத்துங்கள் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கோருவது முற்றிலும் சரியான கோரிக்கைதான்.

# கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் புதிய செயலாளராகக் குணநாதன்!



(அபு அலா)

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் புதிய செயலாளராக இலங்கை நிர்வாக சேவை விசேட தர உத்தியோகத்தர் கே.குணநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான கடிதத்தை கடந்த 11 ஆம் திகதி கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர வழங்கி வைத்தார்.

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை குமாரசிங்கம் - பூலோகேஸ்வரி தம்பதியின் மகனாக 1973 ஆண்டு பிறந்த இவர், தனது பாடசாலைக் கல்வியை மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்திலும் பின்னர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றார்.

1995 - 1998 ஆம் ஆண்டுவரை வவுனியா கல்விக் கல்லூரியில் தனது ஆசிரியர் பயிற்சியை அதி சிறப்பு சித்தியுடன் முடித்து வெளியேறிய இவர், 1999 - 2003 ஆம் ஆண்டு செப்ரெம்பர் வரை யாழ். கல்வி வலய கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆசிரியராக கடமையாற்றினார்.

2001 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக் கழகத்தில் கலைத்துறையில் (வணிகம், புவியியல், அரசியல்) விஷேட பட்டப் படிப்பை சிறப்பு தேர்ச்சியுடன் முடித்து 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இலங்கை நிர்வாக சேவைக்குள் உள்நுழைந்து, தனது நிர்வாக சேவைப் பணியை இணைந்த வடகிழக்கு மாகாணத்தில் முன்னெடுத்தார்.

2004 ஆம் ஆண்டு நவம்பர் முதல் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல்வரை வடகிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக கடமையாற்றி அவர், அதேயாண்டு திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமனம்பெற்று சுமார் 08 வருடங்கள் உள்ளூராட்சித் துறைக்கு பாரிய பங்களிப்புக்களை வழங்கினார்.

கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் பதில் செயலாளராகவும், உலக வங்கியின் சமூக குடிநீர் வழங்கல் செயற்திட்டத்தின் திருகோணமலை மாவட்ட மேற்பார்வை மதிப்பீட்டு அதிகாரியாகவும், பதில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகவும் 2009 ஆம் ஆண்டுவரை கடமையாற்றினார்.

2010 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைகழகத்தில் பொது நிர்வாக டிப்ளோமா பாடநெறியை முடித்த அவர், அதே பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்துறையில் முதுமாணிப்பட்டத்தையும் 2012 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டார்.

இந்தக் காலப் பகுதியில் 2010 - 2013 வரை உலக வங்கியின் அனுசரணையில் நடைமுறைப்படுத்தப்பட்ட புறநெகும, நெல்சிப் திட்டத்தில் மாவட்ட திட்டப் பணிப்பாளராகவும், ஜெய்க்கா ஜப்பான் நிதி அனுசரணையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கிராமிய குடி தண்ணீர் விநியோகத்திட்டத்தில் மாவட்ட திட்ட முகாமையாளராகவும் செயற்பட்டார்.

2013 - 2015 ஆண்டுவரை கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளராகவும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் பதில் செயலாளராகவும் கடமையாற்றினார்.

2015 - 2017 ஆம் ஆண்டுவரை கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளராகவும், 2017 - 2018 ஆம் ஆண்டுவரை மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளராகவும், 2018 - 2021 ஆம் ஆண்டுவரை திருகோணமலை வெருகல் பிரதேச செயலாளராகவும், 2022 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நியமனம் பெறும்வரை திருகோணமலை குச்சவெளிப் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றினார்.

கனடா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, தென்கொரியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இடம்பெற்ற சர்வதேச மாநாடுகளிலும், எமது நாட்டிலும் இடம்பெற்ற சிறப்பு பயிற்சிகளில் பங்கு பற்றி அதன் மூலம் பெற்றுக் கொண்ட அனுபவத்தின் மூலம் எமது நாட்டின் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சிறப்புத் தேர்ச்சிமிக்க வளவாளராகவும் செயற்பட்டு வந்தார்.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம், இலங்கை உள்ளூராட்சி நிறுவகம், மாகாண முகாமைத்துவ பயிற்சித் திணைக்களம், உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு, ஆசியா மன்றம், கொமன்வெல்த் உள்ளூராட்சி அமையம் உள்ளிட்ட பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் செயற்றிட்ட ஆலோசகராகவும், திட்ட வளவாளராகவும் இற்றை வரை செயற்பட்டு வருகின்றார்.







# நயினாதீவு ஆஸ்பத்திரிக்கு உதவித் திட்டம் வழங்கல்

(த.சுபேசன்)

ஈழத்து கவிஞரும் எழுத்தாளருமான சு.வில்வரத்தினத்தின் 18 ஆவது ஆண்டு நினைவாக கடந்த (11) புதன்கிழமை சூழகம் அமைப்பின் செயலாளர் கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில் நயினாதீவு அரசினர் வைத்தியசாலைக்கு உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது கிருமிநாசினி பொருள்கள், நுளம்பு வலைகள், போர்வைகள் வழங்கப்பட்டன. அத்துடன் மரநடுகையும் இடம்பெற்றது.

சமூக நலன் செயற்பாட்டில் சமூக செயற்பாட்டாளர்களான கருணாகரன் நாவலன், இரா. சஞ்சீவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.







# மீசாலை பொது நூலகத்தின் வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வு

(த.சுபேசன்)

சாவகச்சேரி நகரசபையின் மீசாலை பொது நூலகத்தினுடைய 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வுகள் கடந்த வாரம் மீசாலை பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றன.







சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் அ.சீராளன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி திருமதி வினோதா அச்சுதன் கலந்து கொண்டார்.

மேலும் நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் சர்வேந்திரன், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி பவானி, மீசாலை விக்கினேஸ்வர வித்தியாலய அதிபர் திருமதி சுதாமதி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி கஜேந்தினி, மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை அதிபர் இளங்கோவன், ஓய்வுநிலை நூலகர் திருமதி தயாநிதி மற்றும் எழுத்தாளர் சுதாகரன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இதன்போது தேசிய வாசிப்பு மாதப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் மற்றும் மாணவர்களுடைய கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

# தேசிய கராத்தேப் போட்டியில் மன்னார் மாணவி வெண்கலம்



(வாஸ் கூஞ்ஞ)

கொழும்பு சுகதாச விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்ற தேசிய கராத்தே போட்டியில் மன்னார் மாவட்டத்தில் ஒரு வீராங்கனை வெண்கலம் வென்றுள்ளார்.

தேசிய கராத்தே போட்டியில் மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலய மாணவி மகேந்திரன் சேர்வியா, குமித்தே போட்டியில் வெண்கலம் வென்று மன்னாருக்குப் பெருமையை ஈட்டிக் கொடுத்துள்ளார்.

இவர் ஐ.எஸ்.எஸ்.கே. மன்னார் மாவட்ட தலைமை ஆசிரியர் சென்சை அ.அமல்ராஜின் மாணவியாவார்.

தேசிய மட்டத்துக்கு மன்னார் மாவட்டத்தில் இருந்த இரண்டு கழகங்கள் கலந்து கொண்டன. இதில் மன்னார் மாவட்டத்தின் ஐ.எஸ்.எஸ்.கே. கழகத்தில் இருந்து கலந்து கொண்ட இம் மாணவியே வெண்கலம் பெற்றுள்ளார்.




# வெள்ளம் பாதித்த பொத்துவிலுக்கு 10 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கல்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொத்துவில் பிரதேசத்துக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை வக்ப் சபை இணைந்து முஸ்லிம் தர்ம நிதியில் இருந்து 10 லட்சம் ரூபா வழங்கியுள்ளன.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட மிகப் பெரும் வெள்ள அனர்த்தம் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டது.

அந்தவகையில் பொத்துவில் பிரதேச மக்களுக்கான நிவாரண உதவி வழங்கும் முகமாக கொள்ளுபிட்டி பள்ளிவாசல்கள் சம்மேளனம் இலங்கை வக்ப் சபைக்கு அனுப்பியிருந்த விண்ணப்பம் தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டு இந்த நிதி ஒதுக்கப்பட்டது.

ஒதுக்கப்பட்ட இந்த நிதியானது காசோலையாகத் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸால் கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர்றிஸான்ஹுஸைனிடம் திணைக்களத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட், திணைக்கள வக்ப் பிரிவு பொறுப்பாளர் ஏ.எஸ்.எம். ஜாவித், வக்ப் நியாய சபை செயலாளர் எம்.என். எம். ரோஷன் மற்றும் கொள்ளுப்பிட்டி சம்மேளனத் தலைவர் றிஸான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறையில் நடைபெற்றுள்ள இலவச ஆயுள்வேத வைத்திய முகாம்





(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலர் பிரிவில் இலவச ஆயுள்வேத வைத்திய முகாம் சம்மாந்துறை பிரதேச செயலக சுதேச வைத்திய சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.டி.ஷம்ஷத் தலைமையில் விளினையடி-01 கிராம சேவகர் பிரிவில் மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

சுகாதார அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவின் நிதி ஒதுக்கீடின் மூலம் இடம்பெற்ற இந்த வைத்திய முகாமில் பாரம்பரிய வைத்தியர் எம். ஏ. ஆரிபா உம்மாவின் வைத்திய மாணவர்கள் எம்.எஸ்.எம்.நபீஸ், எம்.நஜீம்,எம் நளீம் ஆகியோரால் இலவச வைத்திய சேவை முகாம் நடத்தப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனீபாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்ற இந்த வைத்திய முகாமுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வுக்கு சம்மாந்துறை ஆயுள்வேத பாதுகாப்பு சபைத் தலைவர் டாக்டர் ஏ.எல்.எம் மஜீட், செயலாளர் டாக்டர் எம்.சீ.எம் காலீத், பொருளாளர் வைத்திய மாணவன் ஏ.எல்.எம் நஹீம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



# சிரேஷ்ட ஊடகவியலாளர் சகாதேவராஜாவுக்கு கிழக்கு மாகாண பல்துறை வித்தகர் விருது!

அம்பாறை மாவட்டம் காரைதீவைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப் பாளருமான தேசமான்ய விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா, கிழக்கு மாகாண பல்துறை வித்தகர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான இலக்கிய விழா கடந்த (11) புதன்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றபோது இந்தக் கௌரவ விருது வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் தலைமையில் நடைபெற்ற விழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்த லால் ரத்னசேகர இந்த உயரிய விருதை வழங்கி வைத்தார்.

அவருக்கான அலங்கார மாலையை கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க அணிவிக்க கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி. திசாநாயக்க பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.




# மூதூர் மக்கள் பிரச்சினைகளை கேட்டறிந்தார் குகதாசன் எம்.பி.!

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள எல்லைக் கிராமங்களாகிய புளியடிச்சோலை, கங்கு வேலி ஆகிய கிராமங்களுக்கு களப் பயணம் மேற்கொண்டார்.

இந்தப் பயணத்தின் போது இந்தக் கிராமங்களில் வாழும் மக்களைச் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் குறுங் கால, நீண்ட கால சிக்கல்கள் பற்றிக் கலந்துரையாடினார். அவற்றை தீர்க்க தன்னாலான முயற்சிகளை மேற்கொள் வதாகவும் உறுதியளித்தார்.




# இரத்ததான நிகழ்வு கல்முனையில்!

(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனை அஷ்ரஃப் ஞாபகர்த்த வைத்தியசாலையில் நிலவும் குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்குடன் சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்பு மையத்தின் அம்பாறை மாவட்ட குழு சார்பாக குருதிக்கொடை வழங்கப்பட்டது.

அமைப்பின் அம்பாறை மாவட்ட பணிப்பாளர் ஏ.ஜே.எப்.பைரோஸாவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு அமைப்பின் தேசிய தலைவர் கலாநிதி ரீ.றிஸ் வான் காஸீம், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி ஏ.எல்.எப். றஹ்மான் மற்றும் தர முகாமைத்துவ வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.ஆர். எம்.ஹாரிஸ் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இங்கு அமைப்பின் உயர் பீட உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு குருதி வழங்கினர்.



# கற்பிட்டி பிரதேச விவசாய நிலங்கள் நீரில் மூழ்கிமையால் பெரும் அழிவு!

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்ட சீரற்ற வானிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளது. தாழ் நிலப் பிரசேங்களில் வெள்ள நீர் நிறைந்து காணப்படுகிறது. கற்பிட்டி பிரதேச மரக்கறிச் செய்கைகளும் முழுமையாக அழிவடைந்துள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக 7740 குடும்பங்களைச் சேர்ந்த 28014 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று புத்தளம் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

புத்தளம், முந்தல், கற்பிட்டி, ஆராச்சிக்கட்டுவ, பள்ளம, நாத்தாண்டி, மாதம்பை, வண்ணாத்திவில்லு, தங்கொட்டுவ மற்றும் வென்னப்புவ ஆகிய 10 பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 170 கிராம சேவகர்கள் பிரிவுகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.



அத்துடன் கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 11 கிராம சேவகர் பிரிவுகளில் 841 குடும்பங்களைச் சேர்ந்த 2823 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாலக்குடா கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட நுரைச்சோலை, பூலாச்சேனை, மாம்புரி, நரக்கள்ளி, நாவற்காடு, பனையடி, ஏத்தாளை, முசல்பிட்டி , ஆலங்குடா உள்ளிட்ட பல கிராமங்களில் செய்கை செய்யப்பட்டுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட மரக்கறிச் செய்கைகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.





# “நான் பார்த்த நந்திக்கடல்” நூல் வெளியீட்டு நிகழ்வு!





(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்ட கலாசார பேரவையின் ஏற்பாட்டில் முல்லைப் பொன் புத்திசிகாமணி எழுதிய “ நான் பார்த்த நந்திக்கடல்” நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (13) முல் லைத்தீவு மாவட்ட செயலக பண் டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

வெளியீட்டு நிகழ்வில் பிரதம அதிதியாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் கலந்து கொண்டார். நூலையும் வெளியிட்டு வைத்தார்.

வெளியீட்டு உரையை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.குணபாலன் நிகழ்த்தினார்.

முல்லைத்தீவு மாவட்ட மூத்த எழுத் தாளர் நிலக்கிளி நாவல் புகழ் பால மனோகரன் நூல் சார்ந்த திறனாய்வை முன்வைத்தார்.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், முன்னாள் மாவட்ட செயலக ஓய்வுநிலை பிரதம கணக்காளர் ம.செல்வரட்ணம், ஒட்டுசுட்டான் முதல்வர் நாகேந்திரராசா, முன்னாள் அதிபர்கள், ஏனைய உத்தி யோகத்தர்கள், பொதுமக்கள் , மாண வர்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர்.







# மண் தினத்தை முன்னிட்டு கொக்குத்தொடுவாயில் மரநடுகை

(த.சுபேசன்)

உலக மண் தினத்தை முன்னிட்டு அண்மையில் கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் மரநடுகை நிகழ்வும் விவசாயிகளுக்கு மரக்கன்று வழங்கும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டன.

கொக்குத்தொடுவாய் கமநலசேவை நிலைய குழுத் தலைவர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கமநலசேவை நிலைய உத்தியோகத்தர்கள், விவசாய விரிவாக்க நிலைய போதனாசிரியர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண டனர். இதன்போது மரநடுகையைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு கறுவா கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.





# உப்போடை சாரதா பாலர் பாடசாலையின் 54 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

(வி.ரி. சகாதேவராஜா)

மட்டக்களப்பு கல்லடி உப்போடை ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் சாரதா பாலர் பாடசாலையின் 54 ஆவது ஆண்டு நிறைவு விழா கடந்த (12) வியாழக்கிழமை கல்லடி உப்போடை சுவாமி விபுலானந்தர் மணிமண்டபத்தில் இடம்பெற்றது.

“செல்லச் சிட்டுக்களின் சிங்காரக் கொண்டாட்டம்” எனும் தொனிப் பொருளில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆன்மீக அதிதிகளான ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் முகாமையாளர் நிலமாதவானந்தாஜீ மகராஜ் மற்றும் உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி உமாதீஷானந்தஜி மகாராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக பிரதேச செயலக முன் பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் தி.மேகராஜ் மற்றும் பாலர் பள்ளிப் பணியக வெளிக்கள உத்தியோகத்தர் பா. பரணீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# அட்டாளைச்சேனை கல்வியல் கல்லூரியில் டெங்கு, எலி ஒழிப்பு சிரமதான நிகழ்வுகள்




(எம்.ஏ.றமீஸ்)

நாட்டில் தற்போதைய காலகட்டத்தில் ஏற்பட்டு வரும் எலிக்காய்ச்சல் மற்றும் டெங்கு நோய் போன்றவற்றில் இருந்து பாதுகாப்பு பெறும் வகையில் அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியில் விஷேட சிரமதான நிகழ்வு நேற்று (14) இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ், அட்டாளைச்சேனை பிரதேச சபையுடன் இணைந்து இந்தச் சிரமதான வேலைத் திட்டம் கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கே. புண்ணியமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இந்தச் சிரமதான வேலைத் திட்டத்தில் உப பீடாதிபதி எம்.சி.ஜுனைட், கல்வியியல் கல்லூரியில் பயின்றுவரும் ஆசிரிய பயிலுநர்கள், சுகாதாரத் துறையினர், விரிவுரையாளர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கல்வியியல் கல்லூரின் சுற்று வட்டாரத்தில் உள்ள வடிகான்கள், கால்வாய்கள், நீரேந்து பிரதேசங்கள் போன்றன சுத்தப்படுத்தப்பட்டு டெங்கு நுளம்புகள் உண்டாகும் சூழலும், எலிகள் நடமாடும் இடங்கள் போன்றன சுத்தம் செய்யப்பட்டன.

இதேவேளை கல்லூரியை அண்டிய பிரதேசத்தில் பற்றைக் காடுகளாய் சுற்றாடலுக்கு கேடு விளைவிக்கத்தக்க வகையில் வளர்ந்து காணப்பட்ட மரம் செடி கொடிகள் புல் பூண்டுகள் அழித்தொழிக்கப்பட்டு துப்பரவுப் பணி செய்யப்பட்டது.

இது தவிர டெங்கு நுளம்புகளின் தாக்கம் பற்றியும், எலிக்காய்ச்சலின் கேடுகள் தொடர்பிலும் விஷேட ஆலோசனைகள் இதன்போது சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டது.



# ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் திறப்பு!

ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் தொடர் மழை காரணமாகத் திறக்கப்பட்டுள்ளன.

நேற்று (14) பெய்த மழையால் மல்வத்து ஓயா, வளவ கங்கை மற்றும் மகுரு ஓயா ஆகிய பகுதிகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

இதனால் நீர்த்தேக்கங்களைச் சூழவுள்ள தாழ்நிலங்களில் வசிக்கும் மக்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசனத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தொடர் மழை காரணமாக ராஜாங்கனை நீர்த் தேக்கத்தின் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அங்கமுவ நீர்த்தேக்கத்தில் இரண்டு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.



# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் வவுணதீவில் உலருணவு வழங்கல்!

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வறுமையில் உள்ள மக்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங் கும் அற்றார் அழி பசி தீர்த்தல் என்ற திட்டத்தை கொரோனாப் பேரிடர் ஏற்பட்ட காலத்திலிருந்து முன்னெடுத்து வருகிறது.

இந்தத் திட்டத்தின் தொடர்ச்சியாகக் கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு வவுணதீவுப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கியுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் இ. சூரியகுமார், சூழல் பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த.யுகேஸ் ஆகியோர் கர்ப்பிணித் தாய்மார்களிடம் உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளனர்.

வவுணதீவில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட பாலக்காடு, ஈச்சந்தீவு, சொருவமுனை, இறக்கத்துமுனை, கரவெட்டி ஆகிய பகுதிகளில் இருந்து குடும்பநல உதவியாளர்களினால் அடையாளம் காணப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கே உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.





# சந்நிதியான் ஆச்சிரமத்தில் நேற்று திருவாசக முற்றோதல்

தொண்டைமானாறு, சந்நிதியான் ஆச்சிரமத்தில் மாதந்தோறும் நடைபெற்றுவரும் திருவாசகம் முற்றோதல் வரிசையில் கார்த்திகை மாதத்துக்கான திருவாசக முற்றோதல் ஆச்சிரம ஓதுவார் குழாத்தால் நேற்று (14) ஓதப்பட்டது.



# மண்சரிவு அபாய எச்சரிக்கைகள் நான்கு மாவட்டங்களுக்கு விடுப்பு

நான்கு மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலகங்கள் பலவற்றுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை அறிவிப்பானது முதலாவது கட்டத்தின் கீழ் இன்று (15) முழுவதும் அமுலில் இருக்கும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பதுளை மாவட்டம் – எல்ல, பசறை, ஹாலிஎல, அப்புத்தளை பிரதேச செயலர் பிரிவுகள்.

கண்டி மாவட்டம் – மெததும்பர, பாததும்பர பிரதேச செயலர் பிரிவுகள்.

குருநாகல் மாவட்டம் – ரிதீகம பிரதேச செயலர் பிரிவு. மாத்தளை மாவட்டம் – அம்பன்கஹ கோறளை, ரத்தொட்ட பிரதேச செயலர் பிரிவுகள்.

# மீகொடவில் துப்பாக்கிச் சூடு; காரில் பயணித்தவர் உயிரிழப்பு!

மீகொட, நாகஹவத்த பிரதேசத்தில் காரில் பயணித்த ஒருவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

நேற்று (14) இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 32 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலத்த காயமடைந்த நபர் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட போது உயிரிழந்த நபரின் ஒன்றரை வயது மகளும் மனைவியும் காரில் இருந்தனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தாஜ்மஹால் - ராமர் கோவில் உ.பி. முதல்வரின் பேச்சால்




அயோத்தி ராமர் கோயிலின் கைவினைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர் எனவும், தாஜ்மஹாலைக் கட்டியவர்களின் கைகள் துண்டிக்கப்பட்டன எனவும் உத்தரப் பிரதேச முதல்வர் சர்ச்சைக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

மகாராஷ்டிராவின் தலைநகரான மும்பையில் உலக இந்துக்களின் பொருளாதார அமைப்பின் கருத்தரங்கு நடைபெற்றுவருகின்றது. கடந்த 13ஆம் திகதி தொடங்கிய இக்கருத்தரங்கு இன்று நிறைவு பெறுகிறது. இதில் நேற்றுக் கலந்துகொண்டு உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் உரையாற்றினார்.

அப்போது அவர் தாஜ்மஹால் மற்றும் ராமர் கோயில் கைவினைஞர்களை ஒப்பிட்டு தனது உரையில் பேசியவை வருமாறு:-

'இன்று இந்தியாவில் பா.ஜ.க. ஆட்சியில் தொழிலாளர்களுக்கு மதிப்பளிக்கப்படுகிறது. அனைத்து வகையான பாதுகாப்புகளும் அவர்களுக்கு அரசால் அளிக்கப்படுகிறது. அயோத்தியில் ராமர் கோயில் திறப்பு விழா நிகழ்ச்சிகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

இதில் பிரதமர் நரேந்திரமோடி, ராமர் கோயிலைக் கட்டிய கைவினைஞர்கள் மீது மலர்களைத் தூவி கௌரவப்படுத்தினார். ஆனால், ஆக்ராவில் தாஜ்மஹாலைக் கட்டியவர்களின் கைகள் துண்டிக்கப்பட்டன.

அதேபோல், மிகவும் உயரியவகை துணிகளை நெய்தவர்களின் கைகளும் அக்கால ஆட்சியாளர்களால் துண்டிக்கப்பட்டன. இதன் காரணமாக இன்று அந்த வகை பாரம்பரியமிக்க கலாசாரத் துணிகள் முற்றிலும் அழிந்துவிட்டன' எனத் தெரிவித்தார்.

இதையடுத்து, முதல்வர் யோகி கூறியதைப்போல் தாஜ்மஹாலைக் கட்டிய கைவினைஞர்களின் கைகளை எவரும் துண்டித்ததாக வரலாறு இல்லை என மறுப்புக் கிளம்பியுள்ளது.

இது குறித்து முகலாயர்கள் மீதான வரலாற்று ஆய்விற்கு உலகப் புகழ் பெற்ற அலிகர் முஸ்லிம் பல்கலைகழக வரலாற்றுத் துறையின் ஓய்வுபெற்ற பேராசிரியர் அப்சல் கான் விளக்கமளித்துள்ளார்.

இதுகுறித்து பேராசிரியர அப்சல் கான் கூறியவை வருமாறு:-

'தாஜ்மஹாலை கட்டிய கலைஞர்கள் மேலும் பல கட்டடங்களை டில்லி, ஆக்ரா பகுதிகளில் கட்டினார்கள். அவர்களது கைகள் வெட்டப்பட்டிருந்தமை உண்மையானால் இவை எப்படி சாத்தியம் என யோசிக்க வேண்டும். மாறாக, அந்த முக்கிய பல கைவினைஞர்களுக்கு தன் அரசவையில் பல பதவிகளை அளித்து மகிழ்ந்தார் மன்னர் ஷாஜஹான்.

தாஜ்மஹாலைக் கட்டிய சுமார் 20 ஆயிரம் பேரில் இந்துக்களும் இடம் பெற்றிருந்தனர். முக்கியமான கைவினைஞர்களின் பெயர்கள் தாஜ்மஹாலின் கட்டடங்களிலும் சித்திர எழுத்துகளால் (கேலியோகிராபி) எழுதப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

இதுபோல், முஸ்லிம்களுக்கு எதிராக எதையாவது உளறிக் கொட்டுவதே முதல்வர் யோகி போன்றவர்களுக்கு வேலையாகிவிட்டது. அரசியல் ஆதாயத்திற்காக எதை வேண்டுமானாலும் பேசுவதே இந்துத்துவா தலைவர்களின் வழக்கம் என்பது அனைவரும் அறிந்ததே.' எனத் தெரிவித்தார்.

# குகேஷுக்கு எலான் மஸ்க் வாழ்த்து

உலக செஸ் சாம்பியன்ஷிப் பட்டம் வென்ற குகேஷுக்கு எலான் மஸ்க் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இந்திய கிராண்ட்மாஸ்டர் குகேஷ், நடப்பு சாம்பியன் சீனாவின் டிங் லிரென் இடையிலான உலக செஸ் சாம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் நடந்தது. இந்தப் போட்டி 14 சுற்றுகளைக் கொண்டது.

நேற்றுமுன்தினம் 14ஆவது மற்றும் கடைசி சுற்று நடைபெற்றது. இதில் குகேஷ் கறுப்பு நிற காய்களுடன் விளையாடினார். போட்டி சுமார் 3 மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்றது.

58ஆவது நகர்த்தலில் டிங் லிரெனை வீழ்த்தி குகேஷ் வெற்றி பெற்று உலக சம்பியன் ஆனார். இதன்மூலம் 18 வயதிலேயே உலக செஸ் சாம்பியனாகி குகேஷ் வரலாறு படைத்துள்ளார்.

இதையடுத்து குகேஷுக்கு அனைத்துத் தரப்புகளிலிருந்தும் பாராட்டுகள் குவிந்து வருகின்றன. அந்த வகையில் டெஸ்லா,



ஸ்பேஸ் எக்ஸ், எக்ஸ் நிறுவங்களின் உரிமையாளரும் உலக பணக்காரருமான எலான் மஸ்க், குகேஷுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

குகேஷ் தனது எக்ஸ் தள பக்கத்தில், '18ஆவது ஞா18!' என்று பதிவிட்டிருந்த நிலையில் அதற்குப் பதிலளித்த எலான் மஸ்க், வாழ்த்துகள் என்று பதிவிட்டுள்ளார்.





# தாய்லாந்து இசை விழாவில் குண்டு வெடிப்பு!

**மூவர் பலி; 50இற்கு மேற்பட்டோர் படுகாயம்**

தாய்லாந்தின் வடக்கு தக் மாகாணத்தில் உள்ள உம்பாங் மாவட்டத்தில் நேற்று நள்ளிரவில் இசை திருவிழா நடந்தது.

இதில் சுமார் 9 ஆயிரம் பேர் வரை கலந்துகொண்டனர். அப்போது அங்கு திடீரென்று குண்டு வெடித்தது. இதனால் இசை விழாவில் பங்கேற்றவர்கள் அலறியடித்து ஓடினார்கள்.

இந்தக் குண்டுவெடிப்பில் 3 பேர் பலியானார்கள். 50 பேர் வரை படுகாயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

திருவிழாவில் பங்கேற்ற கூட்டத்தின் மீது வெடி குண்டுகள் வீசப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர். வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவம் நடந்த பகுதி மியான்மர் எல்லைக்கு அருகே உள்ளது. அங்கு கிளர்ச்சியாளர் குழுக்கள் செயல் பட்டு வருகின்றன.

இதற்கிடையே கே.என்.யூ. என்ற கிளர்ச்சிக் குழுவினர் தங்களது எதிரிக் கும்பலுடன் மோதலில் ஈடுபட்டது எனவும், அப்போது வெடிகுண்டுகள் வீசப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆனால் இதை அந்தக் கிளர்ச்சி குழு மறுத்துள்ளது.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சரின் செய்தித்தொடர்பாளர் தனதிப் சவாங்சாங் கூறியவை வருமாறு–

‘குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு முன்பு இரு குழுக்களிடையே சண்டை நடந்துள்ளது.

அந்த வெடிகுண்டுகள், வீட்டில் தயாரிக்கப்பட்டவைகள் என்பது தெரிய வந்துள்ளது. தற்போது பாதுகாப்பு அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்று உள்ளூர் பொலிஸார் தெரிவித்தனர்’ என்றார்.

இதற்கிடையே இந்தச் சம்பவம் தொடர்பாக இருவர் பொலிஸாரால் கைது செய்துள்ளனர்.

**கிரீஸ் கடற்பரப்பில்**

# அகதிகள் படகு கவிழ்ந்து ஐவர் சாவு; பலர் மாயம்!

கிரீஸ் நாட்டின் கடற்பகுதியில் அகதிகள் பயணித்த படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 5 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர்.

கிரீஸ் நாட்டின் கவ்டோஸ் தீவுப் பகுதி வழியாக நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை இரவு அகதிகளை ஏற்றிக் கொண்டு மரப் படகு ஒன்று சென்றுள்ளது. இந்தப் படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி 5 பேர் உயிரிழந்தனர் எனவும் பலர் காணாமல் போயுள்ளனர் எனவும் கிரீஸ் கடலோர காவல்படை நேற்று சனிக்கிழமை தெரிவித்துள்ளது.

சரக்குக் கப்பல்களின் உதவியுடன் காணாமல் போனவர்களை மீட்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை மீட்கப்பட்டவர்களில் 29 பெண்கள் அடங்குவர். அகதிகளில் பெரும்பாலானோர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

காணாமல் போனவர்களின் சரியான எண்ணிக்கை தெரியாதமையால் மீட்புப் பணிகளில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

சமீப காலமாக அகதிகள் படகு கவிழ்ந்து விபத்தில் சிக்கும் சம்பவங்கள் தொடர்கதையாகி வருகின்றன.





கனடா முரசு

பக்கங்கள் 03

ஞாயிற்றுக்கிழமை 15/12/2024

**பொதுத் தேர்தல் நடத்த வேண்டும் சஸ்கட்ச்வான் முதல்வர் கோரிக்கை**

பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென சஸ்கட்ச்வான் முதல்வர் ஸ்கொட் மோ கோரிக்கை விடுத்துள்ளார்.

கனடிய மக்களின் உற்பத்திகள் மீது வரி விதிப்பது 03




# அமெரிக்காவின் மது பானங்களை இறக்குமதி செய்யப்போவதில்லை

## ட்ரம்புக்கு ஒன்ராறியோவின் முதல்வர் பதிலடி

வரி விதிக்க இருப்பதாக மிரட்டல் விடுத்துள்ள டொனால்ட் ட்ரம்புக்கு ஒன்ராறியோவின் முதல்வர் பதிலடி கொடுக்கும் விதத்தில் முடிவொன்றை எடுத்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, உலகிலேயே மிக அதிக மாக மதுபானங்களைக் கொள்முதல் செய்யும் மாகாணமான ஒன்ராறியோ, தற்போது அமெரிக்க மது பானங்களை இறக்குமதி செய்வதில்லை என்ற முடிவுக்கு வர இருப்பதாக ஒன்ராறியோவின் முதல்வர் டக் ஃபோர்டு தெரிவித்துள்ளார்.

02

# ரொறன்ரோவில் நாயுடன் வாகனத்தை திருடியவர் கைது

கனடாவின் ரொறன்ரோவில் நாயுடன் வாகனத்தைக் களவாடிய நபர் ஒருவருக்கு எதிராக பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

39 வயதான நபர் ஒருவருக்கு எதிராக இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. நான்கு வயதான சொக்லெட் லாப்ராடோர் வகையைச் சேர்ந்த நாய் இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

மகளை பாடசாலைக்கு அனுப்பி வைக்கச் சென்ற நபர் ஒருவரின் வாகனம் இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

வாகனம் களவாடப்பட்டு சில மணித்தியாலங்களில் வேறும் ஓர் இடத்தில் வாகனம் மீட்கப்பட்ட போதிலும் அதில் நாய் இருக்கவில்லை என வாகன உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

எவ்வாறெனினும் பின்னர் நாய் மற்றும் அதனை திருடிய சந்தேக நபரையும் பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.






# கனடியர்கள் விரைவில் ஏர் கனடா விமானங்களில் இலவச வைஃபை சேவையை அனுபவிக்க முடியும்

கனடா பயணிகள் விரைவில் ஏர் கனடா விமானங்களில் இலவச வைஃபை சேவையை அனுபவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏர் கனடா நிறுவனம் இந்த சேவையை 2025 மே மாதத்தில் தொடங்க திட்டமிட்டுள்ளது.

Air Canada, Air Canada Rouge மற்றும் Air Canada Express விமானங்களில் இந்த இலவச WiFi சேவை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட அமெரிக்கா மற்றும் சன் மார்க்கெட் பயணிகளுக்கு முதலில் இச்சேவை கிடைப்பதுடன், இந்த இலவச WiFi சேவையைப் பெற அப்பயணி விமான (Aeroplan) உறுப்பினராக இருக்க வேண்டும்.

விமான உறுப்பினராக இல்லாத பயணிகள் இந்த சேவையை குறைந்த கட்டணத்தில் வாங்கி பயன்படுத்தலாம். விமான உறுப்பினர் ஆக விரும்புபவர்கள் இலவசமாக பதிவு செய்ய முடியும்.

இந்த WiFi சேவை ஸ்ட்ரீமிங் தரத்துடன் வழங்கப்படும், இதனால் தொழில்துறையும் பொழுதுபோக்கும் பயணிகளுக்கு வசதியாக இருக்கும்.

2026 ஆம் ஆண்டு வரை இந்த சேவையை நீண்ட தூர சர்வதேச விமானங்களுக்கும் விரிவுபடுத்த ஏர் கனடா திட்டமிட்டுள்ளது.

ஜூலை மாதம், வெஸ்ட்ஜெட் நிறுவனமும் இதேபோல் தங்களது சில விமானங்களில் Starlink நவீன செயற்கைக்கோள் இணையத்தின் மூலம் இலவச WiFi சேவையை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் அதிகரிக்கும் கருணைக் கொலைகள்



கனேடிய அரசாங்கத்தின் புதிய தரவுகளின்படி, கருணைக் கொலை அல்லது மருத்துவ உதவியினால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையானது கனடாவில் அதிகரித்து வருகின்றது.

கருணைக் கொலையானது கனடாவில் கடந்த 2016 ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டில் மாத்திரம் சுமார் 15,300 பேர் இறப்பதில் மருத்துவ உதவி பெற்றதாகக் காட்டும் தரவுகளை கடந்த புதன்கிழமை கனடாவின் சுகாதார பிரிவு வெளியிட்டது.

இது கனடாவில் கடந்த ஆண்டு பதிவான மொத்த இறப்புகளில் 4.7 சதவீதத்தை குறிக்கிறது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் சராசரியாக 77 வயதுக்கும் அதிகமானவர்கள்.

அவர்களில் சுமார் 96 சதவீதமானோர் புற்றுநோய் போன்ற கடுமையான மருத்துவ நோயினால் பாதிக்கப்படவர்கள் ஆவர்.

பெரும்பான்மையானவர்கள் - சுமார் 96 வீதம் - புற்றுநோய் போன்ற கடுமையான மருத்துவ நிலைமைகள் காரணமாக, "நியாயமாக எதிர்பார்க்கக்கூடியதாக" கருதப்பட்ட மரணம் இருந்தது.

கனேடிய சட்டமியற்றுபவர்கள் தற்போது 2027 ஆம் ஆண்டுக்குள் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காகவும் கருணைக் கொலைக்கான அணுகலை விரிவுபடுத்த முயல்கின்றனர்.

கடந்த தசாப்தத்தில் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஸ்பெய்ன் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் கருணைக் கொலையை சட்டமாக்கிய நாடுகளில் கனடாவும் ஒன்றாகும்.

ஹெல்த் கனடாவால் புதன்கிழமை வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்கள், 2023 இல் கனடாவில் கருணைக் கொலையில் இறப்பவர்களின் விகிதம் கிட்டத்தட்ட 16 வீதம் அதிகரித்துள்ளது என்பதைக் காட்டுகிறது.

## ரொறன்ரோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப், தான் ஜனாதிபதியாக பொறுப்பேற்றதும் கனடா, மெக்சிகோ முதலான நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவிகித வரி விதிப்பது உறுதி என்று கூறியிருக்கிறார்.

இந்த வார தொடக்கத்தில், ஒன்ராறியோவின் முதல்வரான டக் ஃபோர்டு, பல அமெரிக்க மாகாணங்களுக்கு மின்சாரம் ஏற்றுமதி செய்வதை நிறுத்தலாம் என்று கூறியிருந்தார்.

ஆனால் அந்த மிரட்டல் டொனால்டு ட்ரம்பை கொஞ்சமும் அசைக்கவில்லை. டக் ஃபோர்டு அவ்வாறு முடிவெடுப்பார் என்றால், அது பரவாயில்லை என ட்ரம்ப் பதிலளித்திருந்தார்.

அதுமட்டுமின்றி, அமெரிக்கா கனடாவுக்கு மானியம் அளிக்கிறது, நாங்கள் அதைச் செய்ய வேண்டியதில்லை என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டிருந்தார்.

ஆண்டுக்கு 100 பில்லியன் அமெரிக்க டொலர் கனடாவுக்கு மானியமாக வழங்கப்படுவதாக குறிப்பிட்டுள்ள ட்ரம்ப், இனி அதன் தேவை இருக்காது என கூறியுள்ளார்.




# கனடாவிலிருந்து கார் ஒன்றைக் திருடி அமெரிக்காவுக்குள் நுழைந்தவர் கைது

கனடாவிலிருந்து கார் ஒன்றைத் திருடி மிகவும் வேகமாக அமெரிக்காவுக்குள் நுழைந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க பொலிஸார் ஒருவர் அவரது கார் மோதுவதிலிருந்து மயிரிழையில் தப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் மதியம், கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவிருந்து கார் ஒன்றை திருடிய ஒருவர், எல்லை கடக்கும் பகுதியான Peace Arch என்னுமிடம் வழியாக அமெரிக்காவுக்குள் நுழைந்துள்ளார்.

அமெரிக்க பொலிஸார் அவரைத் தடுத்து நிறுத்த முயன்றபோது, அவரது கார் நிற்காமல் வேகமாக சென்றுள்ளது.

அமெரிக்க சுங்க மற்றும் எல்லை பாதுகாப்பு அதிகாரிகள் அந்தக் காரை துரத்திச் செல்ல, வொஷிங்டனிலுள்ள Skagit என்னுமிடத்தில் அவரது காரை சுற்றி வளைத்துள்ளார்கள்.

அந்தக் காரை சோதனை செய்தபோது, காருக்குள் ஒரு கத்தி இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

காரைத் திருடிச் சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.








## பொதுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகைப்பிற்குரியது என அவர் தெரிவித்துள்ளார்.

கனடாவின் ஏற்றுமதிகள் மீது அமெரிக்கா வரி விதிப்பது குறித்து அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

ட்ரம்ப் அரசாங்கத்துடன் இணக்கப்பாட்டைஏற்படுத்திக்கொள்ளக் கூடிய ஓர் அரசாங்கம் நியமிக்கப்படுவது பொருத்தமாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

கனடியர்கள் தங்களது தெரிவினை மேற்கொள்ளக்கூடிய ஓர் வாய்ப்பு கிடைக்க வேண்டும் எனவும் இதற்கு பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமெனவும் ஸ்கொட் மோ தெரிவித்துள்ளார்.